DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோதி | த/பெயர் | : | ராமராஜ் |
| ஊர் | : | கடமலைக்குண்டு | தாலுகா | : | ஆண்டிபட்டி |
| சாதி | : | | தொழில் | : | வீட்டுவேலை |
| மதம் | : | இந்து | வயது | : | 38/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன் . சாட்சி ராமராஜ் என் கணவர். சாட்சி கங்காதேவி, ஈஸ்வரி ஆகியோரை தெரியும். செல்லப்பாண்டி என் கணவர் உடன் பிறந்த தம்பி . செல்லப்பாண்டி சித்ரா என்பவரை திருமணம் செய்திருந்தார். எதிரிகளை தெரியும். கடந்த 20 வருடங்களுக்கு முன்பு செல்லப்பாண்டி சித்ராவை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார் . சித்ரா மகாராஜன் என்பவரின் மகள். சித்ராவின் சகோதரர் எதிரி தெய்வேந்திரன் ஆகும் . கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சண்டை சச்சரவுகளோடு வாழ்ந்து வந்தார்கள். சித்ரா கணவருடன் கோவித்துக்கொண்டு பெற்றோர் வீட்டுக்கு போய்விடுவார். நாங்கள் சித்ராவை கூட்டி வந்து கணவருடன் சேர்த்துவைப்போம் . ஒருநாள் கடந்த 2020ம் ஆண்டு செல்லப்பாண்டியை காணவில்லை . சித்ராவிடம் செல்லப்பாண்டியைப்பற்றி விசாரித்தோம் . சித்ராவை கடந்த 21.02.2020ம்

தேதியன்று அவரது வீட்டில் விசாரித்தோம் . வெறியூருக்கு வேலைக்கு போய் இருப்பதாக சொன்னார். வந்துவிடுவதாக சொன்னார். எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. கடந்த 23.02.2020ம் தேதி நானும் , என் உறவினர்களும் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் . புகார் கொடுத்து 6 நாட்கள் கழித்து 29.02.2020 ம் தேதி காலை சுமார் 4.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் என் கணவரை கைபேசியில் தொடர்பு கொண்டார் . மகாராஜன் என்பவர் மயிலாடும்பாறை கிராம நிர்வாக அதிகாரியிடம் அசரணைந்து இருப்பதாகவும், செல்லப்பாண்டியை கொலை செய்துவிட்டதாகவும் , கூலிப்படையினருக்கு 5 லட்சம் கொடுத்ததாகவும் சொன்னார் . தேனி ராஜா லாட்ஜில் அன்புகணேஷ், செந்தில் ஆகியோரை கைது செய்துவிட்டு ராம்நாட்டுக்கு போவதாகவும், எங்களை அங்கு வரவேண்டும் என்றும் சொன்னார் . செல்லப்பாண்டியை ராம்நாட்டில் கொலை செய்துவிட்டதாக சொன்னார் . நானும், எனது உறவினர்களும் ராம்நாட்டுக்கு சென்றோம் . நான், என் கணவர் , எனது நாத்தனார் கங்கா, ஈஸ்வரி, செல்வி ஆகியோர் சென்றோம். உச்சிபுளி என்ற ஊருக்கு சென்றோம். உச்சிப்புளியில் பள்ளிவாசல் இருக்கிறது . அங்கு இருந்துகொண்டு என் கணவர் கடமலைக்குண்டு காவல் ஆய்வாளரிடம் பேசினார் . அடையாளம் ஒன்றை சொல்லி அந்த இடத்திற்கு வரச்சொன்னார் . நாங்கள் அங்கு சென்றோம் . காவல் ஆய்வாளர் அங்கு நான்கு நபர்களை அழைத்துக்கொண்டு வந்திருந்தார் . கிஷோர், தினேஷ், அன்பு கணேஷ் , செந்தில் ஆகியோரும் அங்கு இருந்தனர் . கிஷோர் என்பவர் காவல் ஆய்வாளரிடம் , சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியை கடமலைக்குண்டுலிருந்து உச்சிபுளிக்கு அழைத்துவந்து விட்டுவிட்டதாக சொன்னார். கிஷோர், தினேஷ், அன்பு கணேஷ் , செந்தில் ஆகியோர்

செல்லப்பாண்டியை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள் . கிஷோர், நாகராஜ் என்பவரை கைபேசியில் தொடர்பு கொண்டு சர்கரையும் , பெட்ரோலும் வாங்கி வரச்சொன்னதாகவும், நாகராஜ் வாங்கிகொண்டு வந்து கொடுத்ததாகவும் , கிஷோரும், நாகராஜும் செல்லப்பாண்டியின் பிரேதத்தை புதைக்க குழி வெட்டியதாகவும் , செல்லப்பாண்டியின் பிரேதத்தை குழியில் போட்டு சர்க்கரையை போட்டு , பெட்ரோலை ஊற்றி எரித்துவிட்டதாகவும் , பிறகு குழியை மூடிவிட்டதாகவும் சொன்னார். புதைத்த இடத்தை காவல் ஆய்வாளரிடம் காண்பித்தார் . அங்கு காவல் ஆய்வாளர், தாசில்தார், மருத்துவர் வந்தனர் . ஜே.சி.பி வண்டியை வரவழைத்தனர் . அடையாளம் காட்டிய இடத்தை தோண்டினார்கள் . அழுகிய நிலையில் பிரேதம் ஒன்றை எடுத்தனர் . இடது கை, இடது கால், மண்டை ஓடு எடுத்தனர் . மருத்துவர் எழும்பு துண்டுகளை எடுத்துக்கொண்டார் . எங்களிடம் சில துண்டுகளை கொடுத்து நல்லடக்கம் செய்ய கொடுத்தார் . எழும்பை எடுத்து சாம்பலை ராம்நாடு கடலில் கறைத்துவிட்டோம். கடந்த 20.03.2020ம் தேதி ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார் . வாக்குமூலம் வாங்கினார் . நான் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும். என்னை போலீசார் விசாரித்தனர் .

**<u>குறுக்கு விசாரணை</u>** – மனுவின்மீது குறுக்கு விசாரணை 28.07.2022 முதல் 24.08.2022 வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது .

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரி | த/பெயர் | : சங்கரபாலு |
| ஊர் | : | கடமலைக்குண்டு | தாலுகா | : ஆண்டிபட்டி |
| சாதி | : | | தொழில் | : வீட்டுவேலை |
| மதம் | : | இந்து | வயது | :40/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன் . சாட்சி ராமராஜ் என் அண்ணன். சாட்சி கங்காதேவி, ஈஸ்வரி ஆகியோரை தெரியும். செல்லப்பாண்டி என்அண்ணன். செல்லப்பாண்டி சித்ரா என்பவரை திருமணம் செய்திருந்தார் . எதிரிகளை தெரியும். கடந்த 20 வருடங்களுக்கு முன்பு செல்லப்பாண்டி சித்ராவை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார் . சித்ரா மகாராஜன் என்பவரின் மகள் . சித்ராவின் சகோதரர் எதிரி தெய்வேந்திரன் ஆகும் . கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சண்டை சச்சரவுகளோடு வாழ்ந்து வந்தார்கள் . சித்ரா கணவருடன் கோவித்துக்கொண்டு பெற்றோர் வீட்டுக்கு போய்விடுவார் . நாங்கள் சித்ராவை கூட்டி வந்து கணவருடன் சேர்த்துவைப்போம் . சித்ராவின் சகோதரர் ஒருநாள் எனது அண்ணன் செல்லப்பாண்டி வீட்டிற்கு வந்து செல்லப்பாண்டியை அடித்துவிட்டார். செல்லப்பாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . சுமார்

2.1/2 ஆண்டுகளுக்கு முன்பு செல்லப்பாண்டியை காணவில்லை . சித்ராவிடம் செல்லப்பாண்டியைப்பற்றி விசாரித்தோம் . கேரளாவிற்கு செல்லப்பாண்டி வேலைக்கு போய் இருப்பதாகவும், வந்துவிடுவார் என்றும் சொன்னார் . கடந்த 21.02.2020 அன்ற மகாராஜன் சித்ராவின் வீட்டிற்கு வந்திருந்தார் . நானும், என் உறவினர்களும் மகாராஜனை விசாரித்தோம் . செல்லப்பாண்டியைப் பற்றி விசாரித்தோம் . செல்லப்பாண்டி விரைவில் வந்துவிடுவார் என்று சொன்னார் . காவல் நிலையத்தில் புகார் கொடுப்போம் என்று மகாராஜனிடம் சொன்னோம் . மகாராஜன் புகார் கொடுக்க வேண்டாம் என்றார் . கடந்த 23.02.2020ம் தேதி எனது அண்ணன் ராமராஜ் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . காவல் ஆய்வாளர் எங்களை அழைத்து விசாரித்தார் . எனது அண்ணன் காணாமல்போனது பற்றி சொன்னோம். பிறகு 29.02.2020ம் தேதி காவல் ஆய்வாளர் காலை சுமார் 4.00 மணிக்கு எனது அண்ணன் ராமராஜை கைபேசியல் தொடர்பு கொண்டார் . மகாராஜன் மயிலாடும்பாறை கிராம நிர்வாக அதிகாரியிடம் ஆஜராகி எனது அண்ணன் செல்லப்பாண்டியை கூலி ஆட்களை வைத்து தானும் , மகன் தெய்வேந்திரனும் சேர்ந்து கொலை செய்து விட்டதாக சொல்லியிருப்பதாக சொன்னார் . காவல் ஆய்வாளர் தேனி ராஜா லாட்ஜில் அன்பு கணேஷ் , செந்தில் ஆகியோரை கைது செய்துவிட்டு ராம்நாட்டுக்கு வந்துவிடுவதாக சொன்னார் . எங்களை அங்கு வரச்சொன்னார். நானும், என் உறவினர்களும் உச்சிக்புளி என்ற ஊருக்கு சென்றோம். உச்சிப்புளி பள்ளிவாசல் வழியே புதைத்தாக சொல்லும் இடத்திற்கு போனோம். காவல் ஆய்வாளர் நான்கு எதிரிகளோடு அங்கு இருந்தார் . தினேஷ், கிஷோர் , அன்பு கணேஷ், செந்தில் ஆகியோரை கூட்டி வந்திருந்தார் . சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியை கடமலைக்குண்டிலிருந்து ராம்நாட்டிற்கு கூட்டி வந்து

விட்டதாகவும், அவர்கள் நான்குபேரும் செல்லப்பாண்டியை கொலை செய்ததாகவும் , நாகராஜை கைபேசியில் தொடர்பு கொண்டு பெட்ரோலும் , சர்க்கரையும் வாங்கி வரச்சொன்னதாகவும், நாகராஜும், கிஷோரும் செல்லப்பாண்டியின் பிரேததத்தை அடக்கம் பன்ன குழி வெட்டியதாகவும் , குழியில் செல்லப்பாண்டியின் உடலை போட்டதாகவும், சீனியைபோட்டு பெட்ரோலை ஊற்றி தீ வைத்து எரித்து குழியை மூடிவிட்டதாக சொன்னார். கிஷோர் அடையாளம் காட்டிய இடத்தை தோண்டினால் செல்லப்பாண்டியின் உடல் கிடைக்கும் என்று சொன்னார் . கிராம நிர்வாக அதிகாரி, தாசில்தார், மருத்துவர்களை அழைத்தனர் . அவர்கள் அங்கு வந்தார்கள் . ஜே.சி.பி. இயந்திரத்தை வரவழைத்து இடத்தை தோண்டினார்கள் . அழுகிய நிலையில் பிரேதம் ஒன்றை எடுத்தனர் . மருத்துவர் பரிசோதனை செய்தார் . மருத்துவர் எழும்புத்துண்டுகளை எடுத்துக்கொண்டார் . அடக்கம் செய்ய எங்களிடம் எழும்புத்துண்டை கொடுத்தார் . நாங்கள் எழும்புத்துண்டை வாங்கி எரித்து சாம்பலை கடலில் கரைத்தோம் . பிறகு ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் எங்களிடம் வாக்குமூலம் வாங்கினார் . நான் நடுவரிடம் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள் .

**<u>குறுக்கு விசாரணை</u>** – மனுவின்மீது குறுக்கு விசாரணை 28.07.2022 முதல் 24.08.2022 வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது .

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது . அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |